# துளசிச் செடியும் சாலிக்கிராமமும் பிறந்த கதை

சாந்திப்பிரியா

(ஆன்மீக ஆலயம், பிப்ரவரி, 2009 இதழில் வெளியான இந்த கட்டுரையின் விரிவாக்கப்பட்ட மறு பதிப்பு இது )



துளசிச் செடியும் சில வகை சாலிக்கிராமக் கற்களும்

துளசிச் செடியை பூஜிக்காத இந்துக்கள் கிடையாது. அநேகமாக அனைவருடைய இல்லங்களிலும் வளர்க்கப்படும் அந்த செடி தெய்வீகம் இணைந்த செடி மட்டும் அல்ல, மருத்துவக் குணம் கொண்டதும் ஆகும். அதனால்தான் அனைத்து கோவில்களிலும் துளசி தீர்த்தம் பிரசாதமாக அந்த காலத்தில் இருந்தே கொடுக்கப்பட்டு வந்துள்ளது. துளசியை விஷ்ணுவின் அவதாரமாகவே கருதுகின்றனர். அதற்குக் காரணம் விஷ்ணு பகவான் துளசியை மணந்தவர் என்பதினால் துளசி உள்ள இடத்தில் பகவான் விஷ்ணுவும் இருப்பார் என்பது ஐதீகம். சிவபெருமானுக்கு வில்வம் எப்படி பிடித்தமானதோ அது போல விஷ்ணுவிற்கும் பிடித்தது துளசி இலைகள். இராம துளசி என்ற இளம் பச்சை நிற துளசியும் கிருஷ்ண துளசி என்ற கரும் துளசியும் உள்ளன. அவைகள் அந்தப் பெயர் பெற்றதின் காரணம் தெரியவில்லை. கார்திகை மாதத்தில் பதினோறாம் நாள் அன்று துளசி விஷ்ணுவை மணப்பதாக ஐதீம் இருப்பதினால் அன்று துளசி பூஜை விமர்சையாக

கொண்டாடப்படுகின்றது. கார்திகை மாதங்களில் துளசி இலைகளை தானம் தந்தால் ஆயிரம் பசுவை தானம் செய்ததின் பலன் உண்டாம். பண்டைய கால மக்களின் நம்பிக்கையின்படி விஷ்ணு பகவான் வைகுண்டவாசி என்பதினால் துளசியை தினமும் பூஜித்து வந்தால் வைகுண்டம் என்ற சொர்கத்தை மரணத்திற்குப் பின் அடையலாம் என்ற நம்பிக்கை உண்டு. அதனால்தான் மரணம் அடையும் தறுவாயில் வாயில் துளசி தீர்த்தம் ஊற்றுவது வழக்கத்தில் இருந்தது.

துளசி பற்றிய கூறப்படும் இரண்டுப் புராணக் கதைகள் இது.

ஒரு கதையின்படி விஷ்ணு பகவானுக்கு மூன்று மனைவிகள் உண்டு. அவர்கள் கங்கை, மகாலஷ்மி மற்றும் சரஸ்வதி என்பவர்கள். ஒரு நாள் அவர்கள் மூவரும் விஷ்ணுவுடன் அமர்ந்தபடி பேசிக் கொண்டு இருந்த பொழுது கங்காதேவி விஷ்ணுவை நோக்கி எதோ சாடை காட்ட அதை கவனித்த சரஸ்வதி அவளை தவறாகப் புரிந்து கொண்டு அவள் மீது பாய்ந்து தலைமுடியைப் பிடித்திழுத்து சண்டை இடத் துவங்கினாள். அதைக் கண்டு அந்த சண்டையில் குறுக்கிட்டு சமாதானம் செய்ய முயன்ற மகாலஷ்மிக்கும் சரஸ்வதிக்கும் சண்டை வந்து விட்டது. அப்படி ஏற்பட்ட சண்டையில் சரஸ்வதி மகாலஷ்மியை புமியில் ஒரு செடியாகப் பிறக்கக் கடவது என சாபமிட்டு விட்டாள். அதைக் கேட்டு வருத்தமுற்ற கங்காதேவி சரஸ்வதியை பூமியில் ஒரு நதியாகப் பிறக்குமாறு சாபமிட்டாள். அதைக் கேட்டு கோபமுற்ற சரஸ்வதியோ, தன்னைப் போலவே கங்காதேவியும் பூமியில் மற்றொரு நதியாக பிறக்க சாபமிட்டாள். இப்படியாக ஒருவர் மாற்றி ஒருவராக மூவரும் ஒருவருக்கொருவர் சாபமிட்டனர்.

அவற்றை எல்லாம் கவனித்த விஷ்ணு பகவான் மகாலஷ்மி பூமியில் அனைவரும் வணங்கும் விதத்திலான ஒரு செடியாக துளசி என்ற பெயரில் பிறப்பாள் எனவும் அவளை அனைவரும் வணங்குவர் எனவும், சாப காலம் முடிந்து அவள் மீண்டும் வரும் வரை அவள் பக்கத்திலேயே தான் ஒரு கல்லைப் போல வாசம் செய்து கொண்டு

இருக்கப் போவதாகவும் கூறி தனக்கு சரஸ்வதியை விட மகாலஷ்மி மீது அதிக நெருக்கம் இருந்ததை வெளிப்படுத்தினார். முடிவில் துளசிச் செடியாகப் பிறந்த மகாலஷ்மி சாப விமோசனம் பெற்று அவருடன் இணைந்தாள்.

இன்னொரு கதை இது .

முன்னொரு காலத்தில் தர்மத்வஜா என்ற ஒரு மன்னனின் மகளாக மகாலஷ்மி பிறந்தாள். அவள் ஒரு சாபத்தின் காரணமாக சில மனத் துயரங்களையும், உடல் துயரங்களையும் அனுபவிக்க பூமியிலே இருமுறை பிறக்க நேரிட்டது. அவள் அதன்படி முதல் முறை பூமியில் பிறந்து தன்னுடைய பூர்வ ஜென்ம சாபத்தை விலக்கிக் கொண்டு மீண்டும் விஷ்ணுவை மணக்க ஆசைப்பட்டு தர்மத்வஜாவின் மகளாகப் பிறந்தாள். அவளுக்கு துளசி என்ற பெயரிட்டு வளர்த்தனர். துளசி என்றால் சமிஸ்கிருதத்தில் எடை போட முடியாதவள் (துலா+ சீ ) என்ற அர்த்தம். அதே நேரத்தில் மாயவனான கண்ணனும் ராதை தந்திருந்த ஒரு சாபத்தினால் பூமியில் ஜல்ஹன்தரா என்ற ஒரு அரக்கனாகப் பிறந்து இருந்தார். அவருக்கும் துளசிக்கும் விவாகம் நடந்தது. ஜல்ஹன்தரா செய்திருந்த தப வலிமையால் அவன் சிவபெருமானிடம் இருந்து எவராலும் கொல்ல முடியாத வரத்தைப் பெற்று இருந்தான். அந்த வரத்தின்படி அவன் மனைவி என்று வரை பதிவிரதையாக இருக்கின்றாளோ அது வரை அவனை எவராலும் கொல்ல முடியாது. அவன் மிகவும் கொடுமைக்காரன், முரடன். அதனால் மனைவியை மிகவும் கொடுமைப்படுத்தினான். காலம் ஓடியது. ஜல்ஹன்தரா இறக்க வேண்டிய தருணம் வந்தது. அதே நேரத்தில் மகாலஷ்மி முதல் சாபத்திற்கு விமோசனம் பெற வேண்டிய நேரம். அப்பொழுது விஷ்ணுவானவர் ஜல்ஹன்தரா உருவில் வந்து அவன் வீட்டில் இல்லாத நேரத்தில் அவள் கற்பை சூறையாடினார். மகாலஷ்மியின் கற்பு கலைந்தது, ஜல்ஹன்தரா கொல்லப்பட்டு அழிக்கப்பட்டான். கிருஷ்ணர் அவதாரத்தில் இருந்த விஷ்ணுவும் சாப விமோசனம் பெற்றார். ஆனால் இன்னொரு சாபம் அவருக்கும் துளசி உருவில்

அவதரித்து இருந்த மகாலஷ்மிக்கும் பாக்கி இருந்ததினால் அதற்கேற்ப துளசி தன்னை கற்பழித்து விட்ட விஷ்ணு கல்லாகக் கடவது என சாபமிட்டாள். விஷ்ணு தன் நிஜ உருவைக் காட்டி அவள் இரண்டாவது சாபத்தை அனுபவிக்க பூமியிலே துளசிச் செடியாக பிறப்பாள் எனவும் அப்பொழுது சாலிக்கிராமம் என்ற பெயரில் தான் அவளுடன் இருப்பேன் எனவும், சாபம் முடிந்ததும் மீண்டும் இணைவோம் என்று கூறி விட்டு சாலிக்கிராமக் கல்லாக மாறினார். சாப காலம் முடிந்ததும் மீண்டும் இருவரும் இணைந்தனர்.